மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 98, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

98—

மருத்துவமனையை மேம்படுத்துதல்

***2034—திரு. க. பாண்டியராஜன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆவடியிலுள்ள அரசு மருத்துவமனையை நவீனப்படுத்தி மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், ஆவடி மருத்துவமனை, தற்போது 48 படுக்கை வசதி கொண்ட மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் நாளொன்றுக்கு, சராசரியாக 600 வெளி நோயாளிகளும், 40 உள் நோயாளிகளும் சிகிச்சை பெற்று, பயனடைந்து வருகிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையின்படி, ஆவடி மருத்துவமனையை, உயர்தர மருத்துவமனையாகத் தரமுயர்த்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.*

திரு. க. பாண்டியராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே அனைத்து மாநிலங்களுக்கும் வழிகாட்டும்விதமாக,* Most innovative scheme *என்று பெயர்பெற்ற,*

2016 ஆகஸ்ட் 23]

முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் என்ற உன்னதத் திட்டத்தின்கீழ், கடந்த 5 வருடங்களில், சுமார் ரூ.1,000 கோடிக்குமேல் காப்பீட்டுத் தொகையில் 6 இலட்சம் ஏழை மக்களுக்கு அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆவடி அரசு மருத்துவமனையிலும், இந்த உன்னதத் திட்டத்தை செயல்படுத்தும்விதமாக, அம்மருத்துவமனையின் கட்டமைப்பை உயர்த்தித் தர வேண்டும் என்று மாண்புமிகு அம்மா அவர்களின் அரசை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, Digital Scanner, Thyroid check up instrument, Blood Storage Centre *மற்றும் நான்கு* Haemo Dialyser machine *ஆகிய* equipment–*களையும் நிறுவி, 48 படுக்கை வசதிகள் கொண்ட இந்த அரசு மருத்துவமனையை, நவீன மருத்துவமனையாகத் தரமுயர்த்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–35

இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கக்கூடிய நகராட்சிகளிலே பெரிய நகராட்சியாக ஆவடி நகராட்சி உருவெடுத்திருக்கிறது. சுமார் 4 இலட்சம் மக்கள் இருக்கக்கூடிய அந்த நகராட்சியில், குறைந்தது 100 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக அதைத் தரம் உயர்த்தித் தரவேண்டும். அதை Nephrology, Neurology, Neonatalogy, Cardiology, M.ch. Neurosurgery, Urology, Cardiothoracic surgery *ஆகிய 7 நிபுணர்கள் இருக்கக்கூடிய மருத்துவமனையாக மாற்றித் தரவேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியிலே சமீபத்தில்தான் ஆவடி புதிய தாலுகாவாக வருவாய்த் துறை மூலமாகத் தரம் உயர்த்தப்பட்டது. ஆவடி தாலுகாவாக தரம் உயர்த்தப்பட்டிருக்கின்ற காரணத்தால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசினுடைய கொள்கையின்படி, அது தாலுகா மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்படும். அப்படித் தரம் உயர்த்துகின்றபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்*

கேட்டதற்கிணங்க, புதிய பணியிடங்கள், மருத்துவர் பணியிடங்கள், மருத்துவம்சாரா பணியிடங்கள், அதேபோல, கூடுதல் கட்டமைப்பு வசதிகள் ஆகியவையெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் வழங்கப்படும். அந்தவகையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கனிவோடு பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, மருத்துவமனை தரம் உயர்த்தப்படும் என்ற நல்ல செய்தியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய நல்ல பதிலுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தியாவிலேயே குழந்தை இறப்பு விகிதத்தில்—Infant Mortality rate–ல், 20–க்கும்கீழ், அதாவது ஆயிரம் பிறப்புகளில் 19 குழந்தைகள்தான் இறந்து பிறக்கின்றன என்ற உன்னத நிலையை எய்திய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதோடு, இந்தியாவிலே இருக்கின்ற எந்த மாநிலத்திலேயும் இல்லாத அளவாக Infant Mortality rate–ஐ 15–க்கும்கீழ் இந்த வருடத்தில் கொண்டுவருவோம் என்றவொரு குறிக்கோளுடன் உறுதியெடுத்துள்ள தமிழக அரசைப் பாராட்டுகிறேன்.

அதேநேரத்தில், எனது ஆவடி பெருநகராட்சி, திருமுல்லைவாயில் குளக்கரை மெயின்ரோட்டில் அமைந்துள்ள தாய்–சேய் மருத்துவமனையை 24 மணி நேரமும் இயங்கும் ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்திடவும், ஆவடி காமராஜர் நகர் மெயின்ரோட்டில் உள்ள மகப்பேறு மருத்துவமனையைத் தரம் உயர்த்திடவும் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். Infant Mortality rate–ஐக் குறைப்பதற்கு மிக முக்கியமான காரணியாக இந்த தாய்–சேய் மருத்துவமனைகள் விளங்கும். இவற்றைத் தரம் உயர்த்தி, ஆரம்ப சுகாதார நிலையமாக உருவாக்கித் தரவேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

2016 ஆகஸ்ட் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றபடி, இந்தியாவிலேயே இப்போது—*Infant Mortality rate, Maternal Mortality rate;—*குழந்தை இறப்பு விகிதத்தையும், தாய் இறப்பு விகிதத்தையும் குறைத்த மாநிலத்திலே. உலக சுகாதார நிறுவனம் நிர்ணயித்த இலக்கை, நிர்ணயித்த காலத்திற்கு முன்னதாகவே அடைந்த மாநிலம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தலைமையிலே இருக்கக்கூடிய மாநிலம். (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுத்த நடவடிக்கையால்தான், இந்திய அளவிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ளபடி* Infant Mortality rate *மற்றும்* Maternal Mortality rate *குறைந்த அளவில் இருந்துகொண்டிருக்கின்றன. இந்திய அளவிலே, சராசரி அளவைவிட பாதியளவாகக் குறைந்திருக்கிறது. அந்த அளவிற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கைகள் எடுத்திருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த இரண்டு சுகாதார மையங்களை, ஆரம்ப சுகாதார நிலையங்களாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு இதுகுறித்து எடுத்துச்செல்லப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி அவர்கள்.*

திரு. எம். தமிமுன் அன்சாரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் கண்டெடுத்த மாவட்டம், நாகப்பட்டினம் மாவட்டம். அந்த நாகப்பட்டினம் நகரத்தில் இருக்கக்கூடிய அரசு மருத்துவமனையில், மருத்துவர்கள் பற்றாக்குறை தொடர்ந்து இருந்துகொண்டிருக்கிறது. குறிப்பாக, பிரசவம் பார்க்கக்கூடிய மகப்பேறு மருத்துவர்களும் பற்றாக்குறையாக இருக்கிறார்கள். அதைத் தீர்ப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக மருத்துவர்கள் நியமனத்தில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் செய்யாத அளவிற்கு மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம்–Medical Services Recruitment Board என்ற ஒன்றை பிரத்யேகமாக உருவாக்கி, இந்தியாவிற்கே ஒரு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரை இந்தத் தேர்வு வாரியத்தின்மூலம், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு 14,761 மருத்துவர்கள் மற்றும் மருத்துவம்சாராப் பணியாளர்களை நியமனம் செய்துள்ளது. இப்போதும் மருத்துவர்களை நியமனம் செய்ய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

பொதுவாக நாகப்பட்டினம், இராமநாதபுரம் போன்ற கடைக்கோடி மாவட்டங்கள், அதேபோல மலைப் பிரதேசங்கள்; இங்கெல்லாம் உயர்தர சிறப்பு மருத்துவர்கள் நியமனம் என்பது கொஞ்சம் சவாலாகவே இருந்துகொண்டிருக்கிறது. அதற்காக, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு சிறப்புக் கவனம் செலுத்தி, மலைவாழ் பகுதியிலே பணியாற்றக்கூடியவர்களுக்கு என்ன சலுகை வழங்கப்படுகிறதோ, அதே சலுகையை தற்போது இராமநாதபுரம் மாவட்டத்திற்கும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற நாகப்பட்டினம் மாவட்டத்திற்கும் வழங்கியிருக்கிறது. குறிப்பாக, மகப்பேறு மருத்துவர்கள் OGcian (Obstetrician and Gynaecologist) கலந்தாய்வுமூலம் நியமனம் செய்யப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். தொடர்ந்து நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 99, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. இராஜன் செல்லப்பா, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.